# 6

# ஜெபம்

## தேவனை நம்புங்கள்

*தேவனை நம்புங்கள்எவ்வாறு ஜெபிப்பது என்பதை நாம் அறிவதில்லை என்று நாம் கற்று இருக்கின்றோம். சில வேளைகளில், நாம் எவ்வளவு ''கடினமாக'' ஜெபிக்கின் றோமோ, அவ்வளவு சலிப்புள்ளவர்கள் ஆகின்றோம். மார்ட்டின் லூத்தர் என்பவர் ஒரு சுருக்கமான கவனித்தலை ஏற்படுத்தினார்: ''நீங்கள் ஆவிக்குரிய செரிமானமற்ற தன்மையை அடையுமளவுக்குக் கடினமாக ஜெபிக்காதீர்கள்.''*

*நீங்கள் ஜெபத்தைப் பற்றிப் பல உண்மைகளை அறிந்திருந்தும் ஜெபிக்காமல் இருக்கலாம். நாம் ஜெபிப்பதினாலேயே ஜெபிக்கக் கற்றுக் கொள்ளுகின்றோம். நீங்கள் விரும்புவதைப் பெறுதல் என்பது அல்ல, ஆனால் உங்கள் வாழ்வில் தேவன் செயல்படுவதைக் காணுதல் என்பதே ஜெபித்தலில் உள்ள மாபெரும் மெய்சிலிர்ப்பாக உள்ளது. நீங்கள் விரும்புவதைப் பெறுதல் என்பதல்ல, ஆனால் தேவனை பெறுதல் என்பதே ஜெபத்தின் மாபெரும் ஆசீர்வாதமாக உள்ளது! தேவனைக் கொண்டிருத்தல் - தேவனுடைய பதில்களைக் கண்டறிதல் மற்றும் தேவனுடைய வழிநடத் துதல்களைக் கொண்டிருத்தல் - என்பதே ஜெபத்தின் வல்லமையாக உள்ளது. முன்எச்சரிக்கை! ஆகாயத்தில் "GP" என்பது "Go preach" [சென்று போதியுங்கள்] என்று அர்த்தப்படாததாக இருக்கலாம்; அது "Go plow" [சென்று உழுங்கள்] என்று அர்த்தப்படுவதாக இருக்கலாம். புறநிலைக் கட்டளைகள் அப்படியே கீழ்ப்படியப்பட வேண்டும். அகநிலை என்பது ஏமாற்றக் கூடியதாக இருக்கலாம். ஊழியங்கள், விலை உயர்ந்த கட்டிடங் களைக் கட்டுதல், மற்றும் தனிப்பட்ட நிதிநிலைகள் பற்றிய பயங்கரமான வரலாறுகளை நாம் யாவரும் அறிவோம். நாம் அடையாளக் குறிகளை தவறாக வாசிக்கின்றோம். பின்பு தேவன் பழிதூற்றப்படுகின்றார், ஜெபம் ஒரு தோல்வி என்று கருதப்படுகிறது. நான் எவ்வளவு நீண்ட நாள் வாழ்கின் றேனோ, அவ்வளவுக்கு தேவனுடைய வழிநடத்துதலைக் கண்டறிவது அதிக கடினமானதாக உள்ளது! தேவனுடைய வழிநடத்துதலுக்காக ஜெபியுங்கள். தேவனுடைய வழிநடத்துதலைத் தேடுங்கள். பின்பு மெதுவாகச் செயல்படத் தொடங்குங்கள். தொலைக்காட்சிப் பிரசங்கியார் கள் என்னைப் பயமுறுத்துகின்றார்கள்! அவர்களின் சாட்சியங்கள் என்னை அதிர்ச்சியடையச் செய்கின்றன! அவர்கள் ஜெபிக்கின்றர்கள், தேவன் உடனடியாக "ஜெபித்த அனைத்தையும் அளித்தார்'' என்றார்கள். இது எனது அனுபவமாக இருப்பதில்லை. சில வேளைகளில், நான் எவ்வளவு சிரமப்பட்டுக் கண்ணோக்குகின்றேனோ, அவ்வளவு குறைவாகவே காண்*

கின்றேன். தேவனுடைய அருளிரக்கம் "ஒரு பட்டத்தை விட உயரத்தில் பறக்கிறது" என்பதாகவே காணப்படுகிறது. நமது சுயநலமான விருப்பங்களை அடையாளக் குறிகளில் வாசித்தல் என்பது மிகவும் எளிதாக உள்ளது.

சரியான சூழ்நிலைகளில் விளக்கப்படாத மனப்பதிவுகள் நமக்கு தீர்மானங்களையும் ஞானத்தையும் அனுமதிக்கலாம்/வழங்கலாம், ஆனால் அவைகள் வேத வசனங்களைப் போல் நிச்சயமான வழிகாட்டிகளாக இருப்பதில்லை. அகநிலை என்பது தவறக் கூடியதாக, உடையக் கூடியதாக உள்ளது ... அதைக் கவனமாகக் கையாளுங்கள். நாம் அனுபவத்தில் கொண்டுள்ள எதுவும் தவறு இல்லாததாக இருப்பதில்லை. உணர்வுகள் என்பவற்றை ஒருபோதும் சிந்தனை மற்றும் பொது அறிவுக்குப் பதிலீடாகப் பயன்படுத்தக் கூடாது. சிலவற்றைப்பற்றி நன்முறையில் உணருதல் என்பது, அது செய்ய வேண்டியதாக உள்ளது என்று அர்த்தப்படுத்தாமல் இருக்கலாம். ஜெபத்தில் தானியங்கியானது என்று எதுவும் இருப்பதில்லை.

உங்கள் ஜெபங்களைத் தெளிவானதாக்குங்கள். நீங்கள் எதிர்பார்க்கும் பதிலைத் தெளிவானதாக்குங்கள். ஆயினும், மாறுபாடான சில விஷயங்கள் நடைபெற்றால், அது தேவன் கவனிப்பதில்லை என்று அர்த்தமாவது இல்லை. அப்பொழுதும் நீங்கள் சில விஷயங்களைக் கற்றுக் கொள்ள முடியும். வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள். தேவன் கூறுவதைக் கவனியுங்கள். ஜெபம் என்பது பேசுதல் அளவுக்கு கவனித்தல் என்பதாகவும் உள்ளது. தேவனுடைய வழிநடத்துதலை நோக்குங்கள். தாழ்மையில் கீழ்ப்படியுங்கள். நீங்கள் உங்களை உணர்வுகளால் வழிநடத்தப்படுவதற்கு அனுமதிக்காதீர்கள். உணர்வுகளில் இல்லாத செய்திகளைக் காணாதீர்கள்.

தேவனுடைய வழிநடத்துதலைக் கண்டறிவதற்கு, "மயிருள்ள தோலை வெளியே போடுங்கள்" என்பதே எளிய பதிலாக உள்ளது. நியாயாதிபதிகள் 6:36-40ஐ மீண்டும் படியுங்கள். ஒரு வேலையைச் செய்யும்படி கிதியோன் தேவனால் அழைக்கப்பட்டார். தேவன் தாம் விரும்பியது என்ன என்பதை மிகச் சரியாக கிதியோனிடம் கூறினார். தேவனுடைய வழிநடத்துதல் என்பது இங்கு பிரச்சனையாக இருந்ததில்லை. கீழ்ப்படிதல் என்பதே இங்கு பிரச்சனையாக இருந்தது! கிதியோன் மயிருள்ள தோலை வெளியே போட்டபோது, அவர் தேவனிடம் வழிநடத்துதலைத் தேடவில்லை - அவர் தேவனுடைய நிரூபணத்தையே தேடிக்கொண்டிருந்தார். இங்கு வழி நடத்துதல் என்பது பிரச்சனையாக இருந்ததில்லை; நம்பிக்கை மற்றும் கீழ்ப் படிதல் என்பதே பிரச்சனையாக இருந்தது. தேவனுடைய "மெதுவாகக் கற்றுக் கொள்ளுபவர்களின் வகுப்பில்" கிதியோன் ஒரு விசேஷித்த மாணவராக இருந்தார்! கிதியோனின் மயிருள்ள தோல் அல்ல ஆனால் தேவனுடைய பொறுமை என்பதே பாடமாக இருந்தது. கிதியோன் ஏற்கனவே ஒரு தூதனால் அழைக்கப்பட்டு இருந்தார். தேவன் ஏற்கனவே அற்புதங்களை நிகழ்த்தி இருந்தார். மயிருள்ள தோல் என்பது விசுவாசத்தை யல்ல, சந்தேகத்தையே செயல்விளக்கப்படுத்தியது.

ஆயினும், கிதியோனைக் கடுமையாக நியாயந்தீர்க்காதீர்கள். அப்போது காலங்கள் கடினமானவைகளாக இருந்தன. தேவன் எங்கே இருந்தார்? கிதியோன் "அறியப்படாத அற்பமானவராக" இருந்தார். அவர்

பயப்படுபவராக இருந்தார். அவர் நேர்மையானவராக இருந்தார்.

சங்கீதங்கள் இன்னமும் நமது ஜெப புத்தகமாக உள்ளது. ஆவிக்குரிய ஜெபம் என்பது சடங்காச்சாரமான மதியீனமாக இருப்பதில்லை. உண்மையான ஜெபம் என்பது துன்புறும் மனிதனின் நேர்மையான உணர்வுகளாக இருக்கிறது. கிதியோன் தம்மைத் தாமே நம்ப இயலாத அளவுக்கு தேவன் மீது அவநம்பிக்கை கொள்ளவில்லை. மயிருள்ள தோல் என்பது நமது பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில்லை.நம்பிக்கையும் கீழ்ப்படிதலுமே செய்கின்றன. ஒருவருக்கு நீந்தக் கற்றுத் தருதல் என்பது தண்ணீரிலுள்ள அபாயத்தையும் உள்ளடக்குகிறது. கிதியோன் அந்த அளவுக்குத் தேவனை நன்கு அறிந்திருக்கவில்லை. “உங்களின் எல்லா ஜெபங்களில் இருப்பதைக் காட்டிலும் அதிகமான விசுவாசம், நேர்மையான சந்தேகத்தில் உள்ளது.” விசுவாசம் என்பது பார்வையற்றது அல்ல. ஜெபம் என்பது தேவதைக் கதையல்ல. தேவன் பயன்படுத்துவதற்கு ஒருவரும் “மிகவும் சிறியவராய்” இருக்க முடியாது - ஆனால் ஒருவர் “மிகவும் பெரியவராய்” இருக்க முடியும் என்பதை கிதியோன் கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. உணர்வுகளையல்ல, தேவனையே நம்புங்கள். மிக அதிகமானவர் விரும்புவது “பாசாங்கு செய்தல்” என்பதுதானே தவிர, “பிரசன்னமாயிருத்தல்” என்பது அல்ல. தேவனுடைய கிருபை உங்களைக் காத்துக் கொள்ள இயலாத இடத்திற்கு தேவனுடைய சித்தம் உங்களை வழி நடத்தாது. சவஅடக்கம் போல ஜெபத்தை முன்னேற்பாடு செய்ய முயற்சி செய்யாதீர்கள். நீங்கள் பதில்களைக் கொண்டிராமற் போகலாம், ஆனால் நீங்கள் தேவனைக் கொண்டிருக்கின்றீர்கள்.

# பரிந்து பேசும் ஜெபம்

## லூக்கா 22:31-34

*“நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து” (லூக். 22:32).*

ஜெபிப்பது எப்படி என்று எனக்குத் தெரியவில்லை. நான் அதை அறிந்திருந்தால், ஒருவேளை நான் ஜெபிப்பது தேவையில்லாதிருக்கலாம். ஜெபிப்பது எப்படி என்று எனக்குத் தெரியவில்லை; ஆகையால், ஜெபிப்பது எப்படி என்று போதிப்பதும் எனக்குத் தெரியவில்லை. நான் கொஞ்சமே அறிந்துள்ளேன்; நான் செய்வது பற்றி என்ன நினைக்கின்றேன் என்றுகூட எனக்குத் தெரியவில்லை. *பரிந்து பேசும் ஜெபத்திற்கான* வாய்ப்பு ஒன்று நமக்குள்ளது என்று நான் அறிவதில்லை: நாம் ஒருவர் மற்றவருக்காக ஜெபிக்க முடியும். இது *பயபக்தியுள்ளதாக* இருக்கிறது!

நான் தேவனிடம் பேச முடியும்.
நான் உங்களைப்பற்றி தேவனிடம் பேசமுடியும்.
உங்களுக்காக நான் ஜெபித்தல் என்பதே
உங்களுக்காக நான் செய்யும் மாபெரும் விஷயமாக உள்ளது.

*ஆச்சரியமானது!* இந்தப் பாடம் - பிறருக்காகப் பரிந்து பேசுதல் என்பது இருதயத்தையும் ஜெபத்தில் பிரச்சனையையும் உள்ளடக்குகிறது - மற்றவர்களுக்காகப் பரிந்து பேசுதல். பரிந்துபேசுதல் என்பது இன்னொருவருக்காக ஒருவரிடத்தில் வேண்டுகோள் விடுத்தல் என்பதாக உள்ளது. ஒரு பெண்மணி, “நான் மிகவும் பலவீனமாயிருப்பதால், பிறர் தேவையில் இருப்பதால், மற்றும் தேவன் ஜெபத்திற்குப் பதில் அளிக்கின்றார் என்பதால் நான் பிறருக்காக ஜெபிக்கின்றேன்” என்று ஞானமாய்க் கணித்துள்ளார். *ஆமென்!* எனது ஜெபம் உங்களை எப்படி மாற்றக்கூடும்? இது தனிப்பட்ட சுதந்தரத்தை மீறுகிறதா? பரிந்து பேசும் ஜெபம் என்பது தேவனுடைய இராஜரீகத்தையும் விழுந்துபோன மனிதனின் மிக உயர்வான மனவிருப்பங்களையும் உள்ளடக்குகிறது. பிறருக்காக ஜெபித்தல் என்பது, மிகவும் ஆழ்ந்தறிவுள்ள, பொதுநலமிக்க, உயர்கொள்கைகொண்ட, சுயநலம் அற்ற செயலாக உள்ளது. இது தேவனையும் மனிதனையும் அவர்களின் மிகச் சிறப்பான நிலையில் வைக்கிறது! நமக்காக “எனக்குத் தாரும்” என்பவைகளின் பட்டியல் அல்ல, ஆனால் பிறருக்காக உண்மையான ஜெபமே மாபெரும் ஜெபமாக உள்ளது. உங்கள் ஜெபங்களை மதிப்பிடுங்கள். அவைகள் உங்களுக்கானவைகளா அல்லது பிறருக்கானவைகளா? பரிந்து

பேசும் ஜெபங்கள் நமது மிகுந்த ஆர்வத்திற்குரிய ஜெபங்களாக உள்ளன. பரிந்துபேசுதல் என்பது வலிவார்ந்த வேர்களுடன் ஒரு மிகப்பழங்காலத் தூண்டுதலின் உணர்வாக உள்ளது. இது நமது ஆத்துமாக்களின் எக்ஸ் - ரே வரைபடமாகவும் உள்ளது. நான் என்னையே மாற்றிக்கொள்ள விருப்பம் இல்லாதிருக்கும்போது, தேவனிடத்தில் மற்றவர்களை மாற்றும்படி எப்படி நான் கேட்க முடியும்? இதனால்தான் இந்தப் பாடங்களை எழுதுவது என்பது மிகவும் கடினமாக உள்ளது. ஜெபம் என்பது தேவனிடத்தில் உதவி கேட்டல் என்பது மட்டும் அல்ல - அது தனிப்பட்ட மாற்றத்திற்கான உறுதிப்பாடாகவும் உள்ளது.

> ஓ, தேவனே, ஜெபிக்க எனக்கு உதவும், ஏனென்றால்
> நானாகவே ஜெபிக்க முடியாது!

"என்னைப் பற்றிய எதையும் எனக்குள் இருக்க அனுமதியாதேயும்." பரிந்து பேசும் ஜெபம் பிறரை மாற்றாதிருக்கலாம், ஆனால் அது என்னை மாற்றும். நாம் ஜெபத்தில் ஏன் இவ்வளவு கவனக்குறைவாக இருக்கின்றோம்? இது தேவனுடன் நெருங்கிய நிலையில் இருப்பதற்கு நமக்குள்ள பொதுவான பயத்தை பிரதிபலிக்கிறது, இந்த நெருங்கிய நிலையானது பதிலுக்கு, ஆழமான நட்புறவுகளில் நாம் கொண்டுள்ள குறைபாடுகளுக்கும் ஆவிக்குரிய வகையில் போதிய போஷாக்கு இன்மைக்குமே கூட பொறுப்பாகிறது. பரிந்துபேசும் ஜெபம் மாபெரும் நட்புறவைக் கேட்கிறது! சாந்தகுணம், பரிவிரக்கம், அன்பு ஆகியவை பரிந்து பேசும் ஜெபத்தை வேண்டுகின்றன. திருமண உறவுப் பிரச்சனைகளில் பெரும்பாலானவர்கள், "தேவனே, எனது வாழ்க்கைத் துணையின் குணத்தை மாற்றும்" என்று ஜெபிக்கின்றார்கள். உண்மையான பரிந்து பேசும் ஜெபம், "தேவனே, என்னை மாற்றும்; என்னை முதலில் மாற்றும்" என்று கூறுகிறது. "உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக" என்பது விருப்பங்களுக்கு முற்றுப் புள்ளியை வைத்தவர் என்ற அர்த்தம் அல்ல. ஜெபம் என்பது தானாகவே சூழ்நிலைகளை மாற்ற முடியாது; தேவன் மட்டுமே விஷயங்களை மாற்றுகின்றார். தேவனால் சூழ்நிலைகளை மாற்ற முடியும். அவர் நம்மை மாற்றுவதில் எப்போதுமே மகிழ்வு அடைவார். ஜெபித்தல் என்பது மாற்றத்திற்கானதாகவே உள்ளது. உண்மையான ஜெபம் என்பது அன்பைத் தவிர வேறொன்றும் இல்லை. "நன்கு அன்புகூருகின்றவர் நன்கு ஜெபிக்கின்றார்."

லூக்கா 22:31-34ல் கிறிஸ்து பேதுருவுக்காக ஜெபித்தார். இந்த ஜெபம் பேதுருவை விழுந்துபோகுதலில் இருந்து காப்பாற்றவில்லை, ஆயினும் பேதுரு திரும்பி வந்தார்! "கிறிஸ்து பேதுருவுக்காக ஜெபித்தது போல யூதாஸுக்காகவும் ஜெபித்தாரா?" என்பது அடுத்த கேள்வியாக உள்ளது. இது நம்மை, பரிந்து பேசும் ஜெபத்தின் பிரச்சனையிடத்தில் கொண்டு சேர்க்கிறது. பேதுரு விழுந்துபோவார் என்பதை இயேசு வெளிப்படுத்திய போது, பேதுரு விழுந்து போகாதிருக்கும்படி இயேசு ஜெபித்தார்! பிறருக்கான நமது ஜெபங்களே நமது மாபெரும் ஜெபங்களாக உள்ளன!

# பரிந்து பேசும் ஜெபம் என்பது வசனரீதியானதாக உள்ளது

*வேதாகமத்தின் முந்திய பகுதியில், மதிக்கத்தக்க யோபு பரிந்து பேசும் ஜெபத்தைப் புரிந்துகொண்டு, அதை நடைமுறைப் படுத்தினார். அவர் தமது பிள்ளைகளுக்காக அன்றாடம் தேவனிடத்தில் பரிந்து பேசினார் (யோபு 1:5). யோபுவின் ஜெபங்களின் மூலமாக மட்டுமே அவரது மூன்று நண்பர் களையும் தேவன் மன்னித்தார் (யோபு 42:7-9).*

*மோசேயின் ஆழ்ந்தறிவுள்ள ஜெபத்தை நாம் ஒருபோதும் மறக்கக் கூடாது. அவர் மிகச் சிறந்த பல பண்புகளினால் அறியப்படுகின்றார் - ஆனால் அவரது ஜெபவாழ்வு ஒப்புமைக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. உங்கள் ஜெபத்தை மேம்படுத்திக் கொள்வதற்கு நீங்கள் மோசேயைப் பற்றிப் படியுங்கள்! யாத்திராகமம் 32 ஒரு நினைவுச் சின்னமாக உள்ளது! இது தேவனை வெளிப்படுத்துகிறது. இது மோசேயை வெளிப்படுத்துகிறது! இது ஜெபத்தை வெளிப்படுத்துகிறது! ஆரோன் நிமித்தம் உண்டான கலகத்தினாலும், ‘‘பொற்கன்றுக்குட்டி’’ விக்கிரகத்தினாலும் சீனாய் மலையின் அடிவாரத்தில் இஸ்ரவேலர்கள் பாவம் செய்திருந்தார்கள். மனிதர்கள் பாவம் செய்கின்றபோது, தேவகோபம் வெளிப்படுத்தப் படுகிறது. தேவன் தம் கோபத்தில் இஸ்ரவேலரைப் பட்சித்துப் போட்டு ஆபிரகாமிலிருந்து எழுப்புவதற்கு மாறாக மோசேயிலிருந்து ஒரு புதிய தலைமுறையை எழுப்பப் போவதாக மோசேக்குத் தகவல் அளித்தார். இது சிந்தனையைத் தூண்டக் கூடியதாக உள்ளது. அதிகாரம், பதவிகள் மற்றும் வெகுமதிகள் ஆகியவை வேண்டாம் என்று சொல்ல மிகவும் கடினமானவை களாக உள்ளன. அரசியலில் “அதிகாரக் காய்ச்சலுக்கு?* [Potomac Fever?] *சிகிச்சை எதுவும் இருப்பதில்லை. மோசே துணிந்தார் ... மோசே இடர்ப் படுத்தினார் ... மோசே தேவனை “ஒன்றிக்கு ஒன்றியாக” எதிர்கொண்டார். (1) அவர் அந்தப் புதிய தகுதி நிலையை ஏற்றுக்கொள்ள மறுத்தார். (2) அவர் தேவனுக்கு வேதாகமத்தை மேற்கோள் காண்பித்தார் (திகைக்க வைக்கும் செயல்பாடு). அவர் தேவனுக்கு, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர் களுடன் அவர் [தேவன்] ஏற்படுத்தியிருந்த வாக்குத்தத்தங்களை நினைப்பூட்டினார். (3) மோசே தேவனை எவ்வளவு ஆழ்ந்தறிவுடன் அறிந்திருந்தார்! தேவன் தமது கோபத்தைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்குமாறும், மனந்திரும்புமாறும் அவருக்கு மோசே நினைப்பூட்டினார்! மனிதன் தேவனைக் கடிந்து கொள்ளுகின்றான்! (4) தேவன் மாறினார் (மோசே மாறவில்லை)! நம்ப முடியாத நிகழ்ச்சி! மோசே சத்தியத்தையும் தம் மக்கள் மீது அன்பையும் கொண்டிருந்ததால் வெற்றிபெற்றார். தேவனு டைய புகழ்ச்சியும் இஸ்ரவேலரின் இரட்சிப்புமே அவரது [மோசேயின்] அக்கறையாக இருந்தது. மற்றும், இஸ்ரவேலர் கடிந்து கொள்ளப்பட்டு, பின்பு இரட்சிக்கப்பட்டார்கள்; ஆயினும் அவர்கள், மோசேக்கும் தேவனு க்கும் இடையில் நடந்த உரையாடலைப் பற்றி ஒன்றும் அறிந்திருக்கவில்லை! அவர்கள் தேவனுடைய கோபத்தின் அளவை அறிந்திருக்கவில்லை அதுபோல், அவர்கள் மோசேயின் ஜெபத்தையும்*

கேட்டிருக்கவில்லை!

மற்றவர்களின் ஜெபங்களினால் நமது வாழ்வானது எவ்வளவு அதிகமாகத் தொடப்பட்டுள்ளது? எனக்காக ஜெபியுங்கள்! ஜெபத்தினால் மோசே தமது நாட்டவரை மீட்டுக்கொண்டதோடு, தமது சகோதரனான ஆரோனையும் தனது சகோதரி மிரியாம் என்பவளையும் மீளக்கட்டி எழுப்பினார் (எண். 12:13). எண்ணாகமம் 14:13-19ல் மோசே, இஸ்ரவேலர் களை மீண்டும் இரட்சித்துக் கொண்டார். அவர்கள் கலகம் செய்தபோது, மோசே ஜெபித்தார் - தேவன் மன்னித்தார். மோசேயின் ஊழியத்தில் அவர் ஜெபம் செய்தது பற்றி இருபத்தைந்து நிகழ்ச்சிகளை நாம் வாசிக்கின்றோம்.

எஸ்றாவும் நெகேமியாவும் தங்கள் பிதாக்களும் தங்கள் நாட்டவர் களும் செய்த பாவங்களை அறிக்கையிட்டு, பின்பு பரிந்து பேசினார்கள். இயேசு பேதுருவுக்காக ஜெபித்தார். அவர் நமக்காகப் பரிந்து பேசுவதற்கு என்றென்றும் வாழ்கின்றார் (எபி. 7:25). இயேசு இன்னமும் ஜெபிக்கின்றார்! நமக்காக ஜெபிக்கின்றார்! பாவம் நிறைந்த மந்திரவாதி சீமோனுக்காக ஜெபிக்கும்படி பேதுரு கேட்டுக் கொள்ளப்பட்டார் (அப். 8:12-24). அப். 12ல் களிப்பூட்டும் ஒரு நிகழ்ச்சி உள்ளது. யாக்கோபு வேதசாட்சியாக மரித்திருந்தார், பேதுரு சிறையில் இருந்தார். சகோதரர்கள் ஜெபிப்பதற்குக் கூடினார்கள். யாக்கோபின் மரணத்தைத் தேவன் அனுமதித்திருந்தார், ஆனால் அவர் பேதுருவின் மரணத்தைத் தடுத்திருந்தார். பேதுரு ஒரு தூதனால் காப்பாற்றப்பட்டார். பேதுருவுக்காக சகோதரர்கள் ஜெபித்துக் கொண்டிருந்த அந்த வீட்டிற்கே பேதுரு சென்றார். அங்கிருந்த வேலைக் காரப் பெண் மட்டுமே, அவர் பேதுருதான் என்று நம்ப முடிந்தது! இது ஜெபத்தில் உள்ள தீர்க்கப்பட முடியாத சில பிரச்சனைகளை செயல் விளக்கப்படுத்துகிறது.

நாம் ஒருவருக்கொருவர் நமது தவறுகளை அறிக்கையிட்டு ஒருவர் பிறருக்காக ஜெபிக்க வேண்டும் என்று யாக்கோபு கூறினார் (யாக். 5:13-16). இது, நாம் சபையார் என்ற வகையில் செய்யக் கூடிய மிகவும் நடைமுறைக்கு உகந்த விஷயமாக உள்ளது. நாம் நமது விரோதிகள் மீது அன்புகூர்ந்து அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும் (மத். 5:43-48). பிரசங்கியார்களுக்காக நாம் ஜெபிக்க வேண்டும் (1 தெச. 5:25). ஜெபமற்ற அமருமிடங்கள், வல்லமையற்ற பிரசங்க மேடைகளை ஏற்படுத்துகின்றன. ஜெபிக்கின்ற நடத்துனர்கள் ஜெபிக்கின்ற பின்பற்றாளர்களைக் கட்டியெழுப்பு கின்றார்கள்.

உலகத்திற்காக ஜெபியுங்கள். உயிர்ப்பித்தலுக்காக ஜெபியுங்கள். வியாதிப்பட்டவர்களுக்காக ஜெபியுங்கள். மிகவும் அடிக்கடி நாம் பின்வருமாறு மிகவும் பொதுப்படையாக ஜெபிக்கின்றோம்: "தேவனே, அவர்கள் யாரென்று நீர் அறிகின்றீர்." அவர் அறிகின்றார்! எனக்காக நீங்கள் ஜெபிக்கும்போது, எனது பெயரை நீங்கள் குறிப்பிடுவீர்களா? பிறருக்காக நாம் ஜெபிப்பதைக் காட்டிலும் அவர்களுக்கு நாம் செய்யக் கூடிய அதிக முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் வேறு எதுவும் இல்லை. சகோதரத்துவத் திற்காக நாம் ஜெபிக்கின்ற அளவுக்கு அவர்களை நாம் அன்புகூருவோம்.

ஜெபிக்காமல் இருப்பதற்கும் ஒரு காலமுண்டு! பயமாயிருக்கிறது!

மோசேயும் சாமுவேலும் தங்கள் மக்களுக்காக வெற்றிகரமாக ஜெபித்தார்கள். ஆயினும், தேவன் மோசேயும் சாமுவேலும் இஸ்ரவேலுக்காக ஜெபித்தாலும், மக்களின் பாவங்களின் காரணமாக, தாம் அதைக் கேட்கப் போவதில்லை என்று எரேமியாவிடம் கூறினார் (எரே. 15:1). பாவத்தினால் கடினப்பட்ட வாழ்வில், இரக்கமும் ஜெபமும் ஒரு மனிதனைத் தொட முடியாததாகக் காணப்படும் ஒரு வேளை வருகிறது. இஸ்ரவேலுக்காக ஜெபிக்க வேண்டாம் என்று தேவன் எரேமியாவிடம் மீண்டும் மீண்டும் கூறினார். எரேமியா ஜெபிக்க விரும்பினார், ஆனால் தேவன் அதைத் தடை செய்தார்! மிகவும் கடினமான வேத வசனங்கள் ஒன்றில், சிலருக்காக ஜெபிக்கும்படியும், மற்ற சிலருக்காக ஜெபிக்காதிருக்கும்படியும் யோவான் கூறினார் (1 யோவா. 5:16). இந்த வசனப் பகுதியை ஆழமாகப் படியுங்கள். பாவத்தினால் கடினப்படும் வேளை வராதவரையிலும் முதியவரான சாமுவேல் செய்ததுபோல் செய்யுங்கள், ஜெபியுங்கள்! ஜெபம் என்பது நம்மை மாற்றுவதைக் காட்டிலும் குறைவாகவே உலகத்தை மாற்றுகிறது.

## கிறிஸ்துவின் உதாரணங்கள்

நீங்கள் எவ்வாறு ஜெபிக்கக் கற்றுக் கொண்டீர்கள்? எங்கே கற்றுக் கொண்டீர்கள்? கிறிஸ்தவர்கள் எவ்வாறு ஜெபிப்பது என்பதைக் கற்றுக் கொள்வதற்கு வேதாகமத்தைத் திருப்புகின்றார்கள். நாம் “ஜெப மனிதரான” இயேசுவிடம் இருந்து ஜெபிக்கக் கற்றுக் கொள்ளுகின்றோம். அவர் இரவு முழுவதும் ஜெபித்தார் (லூக். 6:12). ஜெபம் என்பது இயேசுவைப் பற்றி அறிதலாக உள்ளது. அவர் பிறருக்காக, விசேஷமாக பன்னிருவருக்காக ஜெபித்தார். யோவான் 17ல் இயேசு மீண்டும் ஜெபித்தார் - இது பன்னிருவருக்காக மட்டுமின்றி, அதே அளவுக்கு நமக்காகவும் உள்ளது! நாம் யாவரும் ஒன்றாயிருக்க வேண்டும் என்று அவர் ஜெபித்தார். சபை என்பது ஒரே சபையாக இல்லாத வரைக்கும் உலகத்தை ஒருக்காலும் வெற்றி கொள்ள முடியாது! (உங்களால் ஜெபிக்க முடியாமல் போகும் வரையில் ஜெபியுங்கள்.)

நமது வேத வசனப் பகுதியான லூக்கா 22க்குத் திரும்புவோம். பேதுரு விழுந்து போவார் என்பதை கிறிஸ்து அறிந்த வேளையில், கிறிஸ்து அவருக்காக ஜெபித்தார்! இது பரிந்துபேசும் ஜெபத்தின் இக்கட்டான நிலையை வெளிப்படுத்துகிறது! தேவனுடைய இராஜரீகமானது மனிதனின் சுயாதீன ஒழுக்க முகமையை மீறிச் செல்லாது! எனது விருப்பமானது இன்னொருவரின் மனச்சாட்சிக்கு எதிராக முடிவு செய்வதில்லை. ஜெபத்தை ஒரு மாயவித்தையாகக் குறைத்து விடாதீர்கள்: “இன்று என் மனைவியைப் பரிபூரணமானவளாக்கும்!”; “இன்று மில்லியன் மிஷனரி ஊழியர்களை ரஷ்யாவுக்கு அனுப்பும்!” இது விசுவாசமாக இருப்பதில்லை; இது ஜெபமாக இருப்பதில்லை. இது ஆராதனையாயிராமல் மாயவித்தையாக உள்ளது. இது இயேசுவின் கர்த்தத்துவத்திற்குக் கீழ்ப்படிதலாக இராமல், அதிகாரப் பயணமாக உள்ளது. இது தேவனுடனான ஆழமான, தனிப்பட்ட உறவாயிராமல், மூடநம்பிக்கையாக உள்ளது.

இதனால் தான் "எவ்வாறு செய்வது" என்ற புத்தகங்கள் தோல்வியைத் தழுவுகின்றன. கிறிஸ்தவம் என்பது விசுவாசமாக உள்ளது - இது "சமையல் முறை இறையியல்" அல்ல. ஜெபம் என்பது நன்கு கலவை தயார் செய்யும் முறை, திறமை, சூத்திரங்கள் போன்றதாக இருப்பதில்லை. ஜெபம் என்பது தேவனுக்கும் அவரது சித்தத்திற்கும் கீழ்ப்படிதலாக உள்ளது. ஜெபம் என்பது ஒரு போராட்டமாக, "ஆத்துமாவின் உடற்பயிற்சி நிலையமாக" உள்ளது. சுயதிருப்தியை அல்ல அன்றாட மரணத்தையே நாம் நாட வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார் (1 கொரி. 15:31). முந்திய விஷயமானது மரணத்திற்கு வழிநடத்துகிறது; பிந்திய விஷயமானது ஜீவனுக்கு வழிநடத்துகிறது. தேவன் நமது வசதிகளைக் காட்டிலும் நமது பரிசுத்தத்தின் மீது மிக அதிகமாக ஆர்வம் கொண்டுள்ளார்.

*கேள்வி நேரம்!* நான், எனது தனிப்பட்ட ஜெபத்தில், எனது அயலாரின் வாழ்வை மாற்ற முடியுமா? அவரன்றி நான் அவருக்காக ஜெபிக்க வேண்டுமா? நான் ஜெபிக்க வேண்டாம் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளபோது, நான் அவருக்காக ஜெபிக்க வேண்டுமா? ஆம்! எல்லா இடங்களிலும் எல்லா மனிதர்களுக்காகவும் ஜெபியுங்கள் (1 தீமோ. 2:1, 2). அவர்கள் பாவம் செய்கின்றபோது கூட நீங்கள் அவர்களுக்காக ஜெபியுங்கள். சாமுவேல், தாம் ஜெபிக்காதிருந்தால் பாவம் செய்கிறவராயிருப்பதாகக் கூறினார் (1 சாமு. 12:23). நாம் முற்றான விடுதலையைக் கொண்டிருப்பதில்லை. கடற்கரையில் உள்ள கூழாங் கற்களைக் காட்டிலும் மனிதர்கள் அதிகமாக இணைக்கப்பட்டுள்ளார்கள் - கூழாங் கற்கள் தொட்டுக் கொண்டு மட்டும் உள்ளன. மனிதர்கள் ஒரு வயலில் உள்ள வேர்களைக் காட்டிலும் அதிகமாகப் பிணைக்கப்பட்டுள்ளார்கள். பேசப்பட்ட, புத்தகமாக எழுதப்பட்ட ஒவ்வொரு வார்த்தையும், செயலும் எனது தனிப்பட்ட விஷயங்களின் படையெடுப்பாகவே உள்ளது. ஜெபத்தில் நாம் ஏன் ஒருவர் மற்றவரைச் சார்ந்திருக்கக் கூடாது?

விரோதிகளுக்காக ஜெபியுங்கள் (மத். 5:44). விரோதி ஒருவரை வெறுப்பதற்கு மாறாக, அவருக்காக ஜெபியுங்கள். பரிந்து பேசும் ஜெபம் சுவிசேஷ ஊழியத்தையும் உள்ளடக்குகிறது. யாக்கோபு 5:16 - ஆம் வசனம், "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" என்று கூறுகிறது. ஜெபமும் அருளிரக்கமும் கூட ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன (கொலோ. 4:3). தேவன் ஜெபங்களுக்குப் பதில் அளிப்பதினால் கதவுகளைத் திறக்கின்றார். ஜெபம் நல்ல ஊழியங்களைப் பெலப்படுத்துகிறது (2 கொரி. 1:11). பரிந்து பேசுதல் என்பதே இயேசுவின் இருதயமாக உள்ளது; பரிந்து பேசுதல் என்பது கிறிஸ்தவத்தின் இருதயமாக[வும்] உள்ளது.

## பவுலின் ஜெபப் பட்டியல்

உலகமானது, பணக்காரர்கள், அழகுமிகுந்தவர்கள், புகழ்பெற்றவர்கள் ஆகியோரது "பட்டியல்கள்" மீது மயங்கிக் கிடக்கிறது. ஒரு தொலைக்காட்சி

*நடிகர் தமது "மேலான பத்து [படங்களின்] பட்டியலை"க் கொண்டுள்ளார். இப்படிப்பட்ட பட்டியல்கள் ஆர்வத்திற்கு உரியவைகளாக உள்ளன, ஆனால் உண்மையில் இவை தகுதியற்றவையாக உள்ளன. பவுல் ஒரு பட்டியலைக் கொண்டிருந்தார். அவருடையது ஜெபப் பட்டியலாக இருந்தது. நீங்கள் அந்தப் பட்டியலில் இடம் பெற விரும்ப மாட்டீர்களா? அவர் பிறருக்காக ஜெபித்தார்; அவர்களைத் தமக்காக ஜெபிக்கும்படி அவர் கேட்டுக் கொண்டார் (கொலோ. 4:3). இழந்துபோகப்பட்டவர்களுக்காகப் பவுல் ஜெபித்தார் (ரோமர் 9; 10). பவுல் பொதுவாக ஜெபிக்காமல் குறிப்பாக ஜெபித்தார். அவர் சகோதரர்களையும் சபைகளையும் அவர்களின் பெயர்களைக் கொண்டு அழைத்தார்.*

*அவர் சகோதரத்துவத்திற்காக ஜெபித்தார். உண்மையான ஜெபத்திற்கு மாறிய சபை எதுவும், சபையை மாற்றும். பவுல் சபைக்காகக் கவலைப் பட்டார் (2 கொரி. 11:28). அவர் ஜெபித்தார்; அவர் விமர்சிக்கவோ புறங்கூறவோ இல்லை. நாம் பிரசங்கியார்களுக்காக, மூப்பர்களுக்காக, போதகர்களுக்காக, உதவிக்காரர்களுக்காக ஜெபிக்க வேண்டும். போதர்களே, நீங்கள் உங்கள் மாணவர்களுக்காக ஜெபிக்கின்றீர்களா? இயேசுவின் சகோதரரான யாக்கோபு சகோதரர்களுக்காக அதிகமாய் ஜெபித்த காரணத்தால், "முதிய ஒட்டகத்தின் முழங்கால்களை [உடையவர்]" என்று அழைக்கப்பட்டார்.*

*பவுல் அரசாங்கத்திற்காக ஜெபித்தார் (1 தீமோ. 2:1-3). பவுல் பின்னாளில் தம்மைச் சிரச்சேதம் செய்வித்த ஒரு இராயனுக்காக ஜெபித்தார். அவர் தாம் மரித்த நாளில் அந்த இராயனுக்காக ஜெபித்திருப்பார் என்று நீங்கள் நினைப்பதில்லையா? இன்னொருவருக்காக ஜெபிப்பதென்பது நமக்குத் தருவதைக் காட்டிலும் அதிகமான சரியான எண்ணப் போக்கை வேறெதுவும் நமக்குத் தருவது இல்லை. எனக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.*

*ஆண்டவரே, ஒவ்வொரு நாளும் நான்,*
*சுயத்தை மறக்கும் வழியில் வாழ எனக்குதவும்,*
*ஜெபிப்பதற்கு நான் முழந்தாளிடுகையில் கூட,*
*எனது ஜெபம் பிறருக்கானதாகவே இருக்கும்.*

*"ஆண்டவரே, நான் ஜெபத்தில் நம்பிக்கை கொள்ளுவதில்லை. நான் உம்மை நம்புகின்றேன். விசுவாசத்துடன் ஜெபிக்க எனக்குப் போதியும்."*